வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 02.10.2025 வியாழக்கிழமை | இதழ் : 275 | பக்கங்கள் : 08

# எம்மை நாமே ஆளக்கூடிய வாக்கெடுப்பை நடத்துங்கள்

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான மனுவில் போராட்டக்காரர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 02

**"அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பில் தமிழ் மக்களாகிய எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க எம்மை நாமே ஆளக்கூடிய பொதுவாக் கெடுப்பை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச சமூகத்தை கோரி நிற்கிறோம்", - இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனுப்பிவைத்துள்ள மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

செம்மணியில் கடந்த 7 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரத போராட்டத்தின் நிறைவில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மனுவிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இனவழிப்பு, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு சர்வதேச நீதி வேண்டியும் இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையை முற்றாக நிராகரித்தும் செம்மணி, வடக்கு - கிழக்கில் உள்ள நூற்றுக்கணக்கான மனித புதைகுழிகள் விவகாரத்துக்கு

07





# சர்வதேச நீதியை கோரிய உண்ணாவிரதம் நிறைவு!

- புு. கஜிந்தன், த. பிரதீபன் -

- கொலையான சிறுவர்களுக்கு நீதி வேண்டி தீப்பந்தமேந்தி போராட்டம்
- உள்ளக பொறிமுறையை வலியுறுத்திய ஐ. நா.வின் அறிக்கை தீ வைத்து எரிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 02


தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச நீதியை கோரி சுழற்சிமுறையிலான உண்ணாவிரத போராட்டம் நேற்று புதன்கிழமையுடன் நிறைவடைந்தது.

இந்தப் போராட்டம் வடக்கு, கிழக்கு வலிந்து

07

# வெடிக்காதநிலையில் 31 குண்டுகள் மீட்பு!

- பு. கஜிந்தன், த. காண்டீபன் -



கிளிநொச்சி, ஒக். 02

வெடிக்காத நிலையில் 31 குண்டுகள் முகமாலையில் மீட்கப்பட்டன.

நேற்று புதன்கிழமை, முகமாலை வடக்கில் வீடு ஒன்றின் உரிமையாளர் தனது வீட்டில் கிடங்கு ஒன்றை வெட்டியுள்ளார். அப்போதே இந்தக் குண்டுகளை அவர் கண்டுள்ளார். இதையடுத்து, அவர் உடனடியாக பளை

07

# அரியாலை புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 02

அரியாலை - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாதமையாலேயே இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று புதன்கிழமை நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

07

# கைத்தொலைபேசியில் மூழ்கியுள்ள பிள்ளைகள்!

## எச்சரிக்கும் மருத்துவர்கள்

கொழும்பு, ஒக். 02

பிள்ளைகள் அதிகநேரம் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதால், மூளை சார்ந்த பாதிப்புகள் மட்டுமின்றி உடல்சார்ந்த பிரச்னைகளும் ஏற்படும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

பிள்ளைகள் அதிகநேரம் குனிந்து,

07

# 159 பேர் இருந்தும் அரசால் எந்தவித பயனும் இல்லை!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 02

நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 159 பேருடன் பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கம் இருந்தும், மக்களின் அன்றாடப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

07

# தாஜுதீன் கொலை உள்ளிட்ட குற்றங்களுக்கு கடந்த கால ஆட்சியாளர்களே முழு பொறுப்பு

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஒக். 02

வசிம் தாஜுதீன் கொலை போன்ற குற்றங்களை கிராமத்தில் உள்ள சிறிபால அல்லது ஞானரத்னம் செய்யவில்லை, மாறாக நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களே செய்ததாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

விசாரணைகளின்படி குற்றங்களில் தொடர்புடையவர்கள் அரசியல் ஆர் வலர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சட்டம் அமுல் படுத்தப்படும்

07

# தாஜுதீனின் மரணம் தொடர்பில் விரிவான விசாரணை வேண்டும்!

## வலியுறுத்துகிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஒக். 02

முன்னாள் ரக்பி வீரர் வாசிம் தாஜுதீனின் மரணம் குறித்து அரசாங்கம் பாரபட்சமற்ற மற்றும் விரிவான விசாரணையை நடத்தவேண்டும் என்றும், அதை அரசியல் மயப் படுத்த முயற்சிக்கக் கூடாது என்றும், இல்லையெனில் அது அவரது மறைந்த ஆன்மாவை அவமதிப்பதாக இருக்கும் என்றும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறினார்.


இந்த ஆண்டின் தொடக்கத்தில் மீதெனியவில்


07

உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வெங்கடேச சிறீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
படங்கள் - ஐ. சிவசாந்தன்

## 'வியாக்ரன்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக். 02

ஜீவநதி கொமிக்ஸ் வெளியீடான இ. சு. முரளிதரனின் வியாக்ரன் நூல் அறிமுக விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கே. கே. தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை தலைவர் கலாநிதி த. செல்வமனோகரன், கருத்துரையை யாழ். பல்கலைக்கழக சமூவியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

## இந்தியர்கள் மூவர் வடமராட்சியில் கைது

வடமராட்சி, ஒக். 02

சட்டவிரோதமாக ஜோதிட நிலையத்தை இயக்கிய இந்தியர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை தும்பளை வீதியில் சட்டவிரோத ஜோதிட நிலையம் ஒன்று இயங்கி வந்துள்ளது. இந் நிலையத்தை இந்தியர்கள் மூவரே நடத்தி வந்துள்ளனர்.

இந்த நிலையம் தொடர்பாக தும்பளை பிரிதேச கிராம அலுவலர் பருத்தித்துறை நகர சபை தவிசாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார். இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் பருத்தித்துறை நகர பிதா நேரில் சென்று அவதானித்து குறித்த இந்தியர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

ஆனாலும், நேற்று ஜோதிட நிலையம் இயங்கி வந்ததை அடுத்து நகரபிதா வின்சன் டீ டக்ளஸ் போல் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இந்திய பிரஜைகளின் கடவுச் சீட்டை பரிசோதனை செய்த போது குறித்த மூவரும் சுற்றுலா வீஸாவில் நாட்டுக்குள் வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சட்டவிரோத ஜோதிட நிலையம் அமைத்து இயக்கி வந்த மூன்று இந்திய பிரஜைகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (அ-02-08)

## தாளையடி றோ. க. த. க. பாடசாலையில் சிறுவர் விழா



வடமராட்சி, ஒக். 02

வடமராட்சி கிழக்கு தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சிறுவர் தின நிகழ்வு நேற்று நடைபெற்றது. பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டு, சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் விருந்தினர்களாக செம்பியன்பற்று பங்குத் தந்தை அருட்திரு ஜஸ்ரின் ஆதர் மற்றும் மருதங்கேணி பொலிஸ் அதிகாரி, மருதங்கேணி கிராம அலுவலர், தாளையடி கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ-08)



## பழமை வாய்ந்த வேப்பமரம் அகற்றப்பட்டது

வடமராட்சி, ஒக். 02

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி - பருத்தித்துறை வீதியில் காணப்பட்ட பழமை வாய்ந்த வேப்பமரம் வெட்டி முற்றாக அகற்றப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் மரக் கூட்டுத்தாபனம் குறித்த மரத்தை வெட்டியகற்றி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்திற்கு இடைஞ்சலாக காணப்பட்டதாக கூறியே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் இந்த மரம் வெட்டப்பட்டுள்ளது.

ஆயினும் குறித்த இடத்தில் எந்த வித விபத்துச் சம்பவங்களும் பதிவாகவில்லை என்று தெரிவிக்கும் பொதுமக்கள், பழமை வாய்ந்த வேப்பமரத்தை வெட்டி முற்றாக அழித்தமைக்கு தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். (அ-02-08)

## பொலிகண்டியில் படகு தீக்கிரை!

வடமராட்சி, ஒக். 02

கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகும் உபகரணங்களும் விஷமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.



வல்வெட்டித்துறை - பொலிகண்டி பகுதியில் நேற்று புதன்கிழமை மதியமளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

படகு தீயிடப் பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை. தீக்கிரையான படகு, உபகரணங்களால் மீனவருக்கு பல இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-02-05-08)

## மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 02

மலையகத்தின் புகழ்பெற்ற இளம் எழுத்தாளர் சு. தவச்செல்வனின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் வவுனியா மற்றும் தர்காநகர் கல்வியியற் கல்லூரிகளின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி ந. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை 'சிங்கமலை' சிறுகதைத் தொகுதி தொடர்பாக கவிஞர் சி. கருணாகரனும், "இலக்கியம் கலகம் அரசியல்" விமர்சனத் தொகுப்பு நூல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனும், 'மலையகத்தில் பாரதி சிந்தனைகள்' ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு பற்றி கலா சார உத்தியோகத்தர் சபா. தனுஜனும் ஆற்றவுள்ளனர். ஏற்பு [illegible] (அ)

## நாகர்கோவில் ஆலயத்தின் திருவிழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 02

வரலாற்றுச் சிறப்புமிக்க நாகர்கோவில் பூர்வீக நாக தம்பிரான் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா நேற்று புதன்கிழமை ஆரம்பமானது.



இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை பாம்பு திருவிழாவும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பல் திருவிழாவும் 8ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் 9ஆம் திகதி வியாழக்கிழமை சப்பைரதத் திருவிழாவும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும் 11ஆம் திகதி சனிக்கிழமை கேணித்தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ-02-08)

## வட்டு. இந்துக் கல்லூரியில் சிறுவர் தின கொண்டாட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 02

சிறுவர் தினம் சர்வதேச ரீதியாக நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மு.ப 10.30 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தர புலவர் அரங்கில் ஆரம்பமானது.

இதன்போது மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன. அத்துடன், போதைக்கு எதிரான விழிப்புணர்வு நாடகம் ஒன்றும் மாணவர்களால் ஆற்றப்பட்டது.

இறுதியாக "மாணவர்களின் முன்னேற்றத்துக்கு பெரிதும் பங்காற்றுவது பெற்றோர்களா ஆசிரியர்களா" என்ற தலைப்பில் ஆசிரியர்களால் பட்டிமன்றம் ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

இதில், கல்லூரியின் பதில் அதிபர் மயூரன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-05)

## சட்டவிரோதமான கட்டடங்களுக்கு வடமராட்சியில் சிவப்பு எச்சரிக்கை!

வடமராட்சி, ஒக். 02

வடமராட்சி கிழக்கில் சில பிரதேசங்களில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு எதிராக பருத்தித்துறை பிரதேச சபையால் சிவப்பு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.

அதில், "பிரதேச சபையின் அனுமதியின்றி தங்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளை உடன் நிறுத்தவும். மீறினால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுவீர்கள்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர் பகுதியில் அபிவிருத்தி

யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் முடிந்து விட்டன. யுத்த காலத்தில் தமிழரின் பிரதான கவனம் முழுவதும் உரிமையைப் பெறுவதாக இருந்தது - அபிவிருத்தி என்பது எப்போதும் இரண்டாம்பட்சமான ஒன்றாகவும் பெரும்பாலும் கருத்தில் கொள்ளப்படாதாகவும் இருந்தது. இந்த நிலையில் பெரும் உயிரிழப்புகளுடன் யுத்தம் முடிவுற்றது.

யுத்தத்துக்குப் பின்னரான அரசியல் என்பது முற்றிலும் நீதி கோரும் அரசியலாகவே இருந்தது - அபிவிருத்தி இரண்டாம்பட்சமானதாகவும் ஆகக்குறைந்தது அது தொடர்பான கரிசனையைக்கூட தமிழ் தலைமைகள் வெளிப்படுத்தியதில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் முதலீட்டு திட்டங்கள் அனைத்துமே கொழும்பின் தீர்மானங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களாகவே இருக்கின்றன. ஆனால், அவ்வாறான திட்டங்களுக்கும் எதிர்ப்புகள் காண்பிக்கப்படுகின்றன.

இதிலுள்ள, முரண்பாடான விடயம் எதிர்ப்புக்கான காரணங்களும் கொழும்பிலிருக்கும் அரசுசாரா நிறுவன பின்புலம் கொண்ட அதே போன்று, அரசாங்க எதிர்ப்பு அரசியல் குழுக்களின் மத்தியிலிருந்துதான் வடக்கு கிழக்குக்குள் நுழைகின்றன. இவ்வாறு நுழைக்கப்படும் எதிர்ப்புகள் விழிப்புணர்வற்ற மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டு, பின்னர் மெதுவாக பெருப்பிக்கப்படுகின்றன. பொதுவாக சாதாரண மக்கள் அவர்களின் வாழ்வியல் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படப்போவதான கதைகள் விதைக்கப்படும்போது அதனை நம்புவது இயல்பானது. சாதாரண மக்கள் எப்போதும் அச்சத்தின் வழியாக கோபப்படுவார்கள். அந்தக் கோபத்தை மற்றவர்கள் தங்களின் சுயநல திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்வர்.

இதற்கு அடிப்படையான காரணம் வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி பற்றிய சிந்தனையோடு தமிழ் தலைமைகள் என்போர் இல்லை. இதன் காரணமாக வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் முதலீட்டுத் திட்டங்களை வெளியிலிருப்போர் இலகுவாகக் குழப்ப முடிகிறது. நிலைமை குழப்பப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய தலைமைகள் என்போர் தங்களின் வாக்குச் சேகரிப்பு அரசியலுக்காக மக்களின் அறியாமையை ஆதரிப்பவர்களாகவே தங்களை முன்னிறுத்திக் கொள்கின்றனர். இதனால், நடக்கப்போவது என்ன?

வடக்கு - கிழக்குக்குள் எந்தவொரு முதலீட்டாளரும் ஆர்வம் காண்பிக்காத நிலைமையே ஏற்படும். தமிழர் பகுதியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் அந்தப் பகுதி மக்களால் எதிர்க்கப்படுகின்றன என்னும் தகவலே இறுதியில் அந்நிய முதலீட்டாளர்களைப் போய்ச் சேரும். இவ்வாறான நிலைமை தொடருகின்றபோது, அனைத்துத் திட்டங்களும் தென்னிலங்கையில் சுமுகமாக முன்னெடுக்கப்படும். இந்த நிலையில், இந்திய மற்றும் மேற்குலக முதலீட்டாளர்கள் எப்பகுதியில் ஆர்வம் கர்ண்பிப்பார்கள்?

வடக்கு - கிழக்கில் தடியெடுத்தவர் எல்லாம் தண்டல்காரர் என்னும் நிலைமை காணப்படுவதால் எங்கிருந்தோ நுழைபவர்கள் எல்லாம் தமிழர்களுக்கான மீட்பர்களாகி விடுகின்றனர். தமிழர்களின் பொருளாதார அபிவிருத்திக்காக திட்டமிட்டு - மக்களுக்கு உண்மைகளை உணர்த்த வேண்டிய தமிழ் தலைமைகளோ இறுதியில் அனைத்துக்கும் பின்னால் இழுபட்டுச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் அபிருத்தித் திட்டங்கள் முடங்கும்போது என்ன நடக்கும்? தொடர்ந்தும் வடக்கு - கிழக்கு பொருளாதார நிலையில் நலிவுற்ற பகுதியாகவே இருக்கும். வசதியுள்ள ஒவ்வொருவரும் அந்தப் பகுதியிலிருந்து வெளியேறிச் செல்வர். வடக்கு - கிழக்குக்குள் எந்தவொரு பெரும் முதலீட்டுத் திட்டங்களும் நடந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக செயல்படும் தரப்புகள் அனைத்துக்கும் பின்னால் இருக்கும் அரசியல் இதுதான். ஒரு விடயம்தான் இறுதியில் நிகழும் அதாவது, வடக்கு - கிழக்கு ஒருபோதும் அபிவிருத்தியை நோக்கிச் செல்லப் போவதேயில்லை.

# உலக அகிம்சை தினம்



**மகாத்மா காந்தியின் 156ஆவது ஜெயந்தி தினம் இன்றாகும். அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

இந்தியாவின் தேசபிதா அகிம்சா மூர்த்தி காந்தியடிகளின் பிறந்ததினம் இன்று சர்வதேச அகிம்சை தினமாகக் கொண்டாடப்படுகின்றது. அடிகளாரின் பிறந்த நாளை உலக வன்முறையற்ற தினமாக 'ஐக்கியநாடுகள் சபை பிரகடனப்படுத்தியமை வரவேற்பிற்குரியதாகும். இந்தியாவில் காந்தியின் பிறப்பைக் குறிக்கும் வகையில் தேசிய விடுமுறை அறிவிக்கப்படுகின்றது. இத்தினம் கல்வி மற்றும் பொது விழிப்புணர்வு மூலம் அகிம்சைக்கான கொள்கைகளை ஊக்கப்படுத்த விழைகின்றது. ஐ.நாவில் உறுப்பினராக உள்ள அனைத்து நாடுகளும் இத்தினத்தை அனுசரிக்கின்றன. 2007ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தீர்மானம் நிறைவேற்றியதன் மூலம் ஐ.நா பொதுச்சபையால் இத்தினம் ஏற்படுத்தப்பட்டது.

அமைதி மற்றும் அகிம்சையின் உலகளாவிய அடையாளம் காந்திஜி. அவரின் தத்துவமான சத்தியாக்கிரகம் மற்றும் வன்முறையற்ற எதிர்ப்பு, நவீன வரலாற்றில் மாற்றத்திற்கான மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாக உள்ளது.

"அகிம்சை மனித குலத்தின் வசம் உள்ள மிகப்பெரிய சக்தி. அது அழிக்கும் வலிமையான ஆயுதத்தைவிட வலிமையானது" என்று காந்தி கூறினார். இந்த நம்பிக்கை அமெரிக்காவில் மார்ட்டின் முதல் தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான நெல்சன் மண்டேலாவின் போராட்டம் வரை உலகெங்கிலும் உள்ள இயக்கங்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கிறது. அவரது கருத்துக்கள் எண்ணற்ற தலைவர்கள் மற்றும் இயக்கங்களில் செல்வாக்கு செலுத்தின.

காந்தியின் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அவரது அமைதியான போராட்டங்கள், குறிப்பாக 1930இல் அவர் மேற்கொண்ட தண்டியாத்திரை அடக்குமுறையை எதிர்கொள்ள அகிம்சையின் சக்தி மீதான அவரது நம்பிக்கையை எடுத்துக்காட்டியது. காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை என்பது ஒரு அரசியல் கருவி மட்டுமல்ல, அமைதியான வழிமுறைகள் மூலம் மட்டுமே அமைதியை அடையமுடியும் என்ற நம்பிக்கையில் வேரூன்றிய ஒரு வாழ்க்கை முறையாகும்.

சர்வதேச அகிம்சை தினம் மகாத்மா காந்தியின் அமைதி மற்றும் அகிம்சை குறித்த நீடித்த தத்துவத்தின் உலகளாவிய நினைவூட்டலாகச் செயற்படுகிறது. அவரது பிறந்த நாளில் கடைப்பிடிக்கப்படும் இந்தநாள், அவர் தமது வாழ்நாள் முழுவதும் வென்ற வன்முறையற்ற எதிர்ப்பின் கொள்கைகளுக்கு மரியாதை செலுத்துகின்றது.


அரசியல், சமூக மற்றும் சுற்றுச் சூழல் சவால்களால் குறிக்கப்பட்ட ஒரு சகாப்தத்தில், காந்தியின் அகிம்சை கொள்கைகள் ஆழமாக எதிரொலிக்கின்றன. பயங்கரவாதம், மோதல், பருவநிலை மாற்றம் மற்றும் வளர்ந்துவரும் சமத்துவமின்மை ஆகியவை அமைதியான தீர்வுகளுக்கான அவசரத்தேவையை வலியுறுத்துகின்றன. மனித குலத்தின் உள்ளார்ந்த நன்மை மீதான காந்தியின் நம்பிக்கை பிளவுகளை குணப்படுத்துவதற்கும் தொற்றுநோய்கள் மற்றும் வறுமை உள்ளிட்ட நவீன நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கும் ஒரு செயல்திட்டத்தை வழங்குகிறது.

காந்தியின் ஞானம், அரசியல் எதிர்ப்பைத் தாண்டி நீடித்த பிரச்னைகளைத் தொடுவதற்கு விரிவடைந்தது. ஒவ்வொருவரின் தேவைக்கும் போதுமானது. ஆனால் அனைவரின் பேராசைக்கும் அல்ல என்ற அவரது புகழ்பெற்ற மேற்கோள் அகிம்சை மற்றும் பொறுப்பான வளப்பயன்பாட்டிற்கு இடையேயான தொடர்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இன்றைய சூழலில் எளிமை, பாதுகாப்பு மற்றும் தன்னம்பிக்கை ஆகிய அவரது மதிப்புகள், தூய்மை மற்றும் சுற்றுச் கூழல் நிலைத்தன்மையை ஊக்குவிக்கும் தூய்மை இந்தியா இயக்கம் போக்ற இந்தியாவின் முன்முயற்சிகளில் பிரதிபலிக்கின்றன. இதன் அடிப்படையிலான ஒரு வேலைத்திட்டமே இலங்கையிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் 'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டமாகும். இவை மகாத்மா காந்தி வலியுறுத்தும் நாட்டுப்பற்று என்ற எண்ணக்கருவூடாக சமூகங்களை ஒன்றிணைப்பதற்கான ஒரு முயற்சியாகும். இவை எல்லாம் தூய்மை தெய்வபக்திக்கு அடுத்தது. என்ற மகாத்மாவின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பனவாகும். குடிமக்கள் தங்கள் சுற்றுப்புறத்தை பராமரிப்பதற்கான கூட்டுப்பொறுப்பை உடையவர்களாவர் என்ற கருத்தை மேலும் வலுவூட்டுவதாக உள்ளது,

பல்பரிமாண ஆளுமைகளைக்கொண்ட காந்திஜி இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாகத் தலைமையேற்று நடத்தியதின் காரணமாக இவர் 'விடுதலை பெற்ற இந்தியாவின் தந்தை' என்று அழைக்கப்படுகின்றார். சத்தியாக்கிரகம் என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம் இந்திய நாட்டுக்கு மட்டுமன்றி இலங்கை போன்ற கீழைத் தேச நாடுகளுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது. காந்தியின் அகிம்சை வழியை உலக நாடுகள் பின்பற்றினால் உலக சமாதானம் என்றும் சாத்தியமே.

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி**
ஆசிரியர் 'காந்தீயம்'
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் தொடங்குவதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். நீங்கள் கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். ஈகோ வந்து செல்லும். நிதானம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**கன்னி**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**துலாம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப்பார்க்க வேண்டி வரும். மற்றவர்களின் குறைகளை கவனம் செலுத்த வேண்டாம்.

**மகரம்**
இன்றைய தினம் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களிடம் விட்டுக்கொடுத்துப் போங்கள். கவனமுடன் செயல்பட வேண்டும்.

**கும்பம்**
புதிய கோணத்தில் பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உங்கள் கை ஓங்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வீடு வாங்குவது குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

# வங்களாவடியில் புதிய கோப்சிற்றி

யாழ்ப்பாணம், ஒக். 02

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கோப் சிற்றி நேற்று வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை கட்டடத் தொகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையளர் கி.சந்திரசேகரனால் இது நாடா வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த. தர்மராஜேந்திரன் தலைமையில் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகள் பணியாளர்களது பிரசன்னத்துடன் குறித்த நிகழ்வு நேற்று காலை இடம்பெற்றது.

வேலணை நுகர்வோருக்கு பொருட்களை குறைந்த விலையில் வழங்கும் நோக்குடன் நவீன வசதிகளை கொண்டு குறித்த கோப் சிற்றி திறந்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# முனை கடற்கரையில் சிறுவர் மகிழ்வகம்

யாழ்ப்பாணம், ஒக். 02

வடமராட்சி - பருத்தித்துறை முனைக் கடற்கரையில் ஒரு மில்லியன் பெறுமதியில் அமைக்கப்பட்ட சிறுவர் மகிழ்வகம் சிறுவர் தினமான நேற்று திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வு பருத்தித்துறை நகரபிதா வின்சன் தீ போல் டக்ளஸ் போல் தலைமையில் பருத்தித்துறை முனை கடற்கரையில் இடம்பெற்றது.

முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டதை தொடர்ந்து மங்கல சுடர்கள் ஏற்றப்பட்டன.

சுடர்களை மதகுருமார்களான பால சதீஸ்வர சர்மா, அருட் தந்தை வின்சன் பற்றிக், டனுசா மரைன் உரிமையாளர் சுமித்திர பெர்ணாண்டோ, செயலாளர் தாரணி கஜரூபன் உட்பட பலர் ஏற்றி வைத்ததை தொடர்ந்து ஆசியுரை, தலைமை உரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து சிறுவர் மகிழ்வக பெயர்ப்பலகையினை டனுசா மரைன் உரிமையாளர் சுமித்திர பெர்ணாண்டோ மற்றும் சபை தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

தொடர்ந்து கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை மற்றும் சென்.தோமஸ் பெண்கள் பாடசாலை ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பருத்தித்துறை நகரசபை உப தவிசாளர் தேவசிகாமணி தெய்வேந்திரம், நகர சபை உறுப்பினர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், கிராம மக்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# முனைப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்த படகு சவாரி மையம்

யாழ்ப்பாணம், ஒக். 02

வடமராட்சி பருத்தித்துறை முனை கடற்கரை பகுதியில் தனி யார் நிறுவனமான டனுசா மரைன் நிறுவனத்தின் மூன்று மில்லியன் பெறுமதியில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் நோக்கில் இயந்திரப் படகு சவாரி மற்றும் சிறிய துடுப்பு வலித்து செல்லும் படகுகள் சுற்றுலாவுக்காக நேற்று கைளிக்கப்பட்டுள்ளன.

மிக குறைந்த கட்டணத்தில் சாதாரண மக்களும் பயன்படுத்தக் கூடிய வகையில் இப்படகுச் சவாரிகள் இடம் பெறவுள்ளதாக அதனை ஏற்பாடு செய்த பருத்தித்துறை நகரபிதா வின்சன் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் டனுசா மரைன் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சுமித்தி பெர்ணாண்டோ ஆகியோர் தெரிவித்தனர்.

பரீட்சாத்த படகு சவாரி ஆரம்ப நிகழ்வுகள் பருத்தித்துறை நகர பிதாவும், பிரபல தொழிலதிபருமான வின்சன்ட் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் இடம் பெற்றன. இதனை டனுசா மரைன் நிறுவன முகா மைத்துவப் பணிப்பாளர் சுமித்தி பெர்ணாண்டோ தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், டனுசா மரைன் நிறுவன அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(அ-02-08)

# கோப்பாயில் புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், செப். 02

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் இருபத்தெட்டாவது நிகழ்வு இம் மாதம் 03, 04, 05 ஆம் திகதிகளில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் முதல் நாள் மாலை நிகழ்வாக "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும், கலாநிதி கார்த்திகேசு திருப்பதி நினைவு அரங்கில் ஓய்வுநிலை ஆசிரியர் சு.சிவனேசராசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல்களின் அறிமுக உரைகளை கணபதி சர்வானந்தாவின் "இவர்கள் மகாத்மாக்கள்" நூல் தொடர்பாக எழுத்தாளர் வடகோவை வரதராஜனும், மு. அஜந்தனின் "அரங்க ஒளியியல்" புத்தகம் பற்றி அரங்கவியலாளர் கலாநிதி தே. தேவானந்த் அவர்களும், இ.இராஜேஸ்கண்ணனின் "சமயமும் சமூக-பண்பாட்டு உருமாற்றமும்" நூல் பற்றி ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி ந.இரவீந்திரனும், பத்மா இளங்கோவனின் " செந்தமிழ் சிறுவர் கதைப் பாடல்கள்" நூல் பற்றி சட்டத்தரணி சோ. தேவராஜாவும் ஆற்றவுள்ளவுள்ளனர்.

விசேட கலை நிகழ்வுகளாக சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில், பு.கணேசராசாவின் நெறியாள்கையில் "முட்டை" மற்றும் பு.கணேசராசாவின் எழுத்துரு, நெறியாள்கையில் "ஆட்டுக்குட்டி?"ஆகிய நாடகங்களும் இடம்பெறுவுள்ளன.

மேலும், இந் நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 02

வடக்கு மாகாணம், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்க பிரதிநதிகளுடனான கலந்துரையாடலொன்று, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

பிரச்னைகளை தீர்த்துக்கொண்டு கூட்டுறவு கட்டமைப்பை எவ்வாறு வலுப்படுத்துவது, இதற்காக அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் சம்பந்தமாக அமைச்சர் [illegible] ளித்தார்.

கூட்டுறவுச் சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்கான யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பற்றியும் ஆராயப்பட்டன.



அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், சிறீபவானந்தராஜா, யாழ்.மாநகர சபை உறுப்பினர் சு.கபிலன் ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர், அதிபர் இடமாற்றங்களை சமநிலைப்படுத்த துரித நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 02

**ஆசிரியர் மற்றும் அதிபர் இடமாற்றங்களை சமநிலைப் படுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

கல்வித்துறையில் இடமாற்றங்களை நிராகரிப்பது நீண்டகாலமாக நிலவும் நடைமுறையாக உள்ளது. இது இடமாற்றங்களுக்கு இணங்காத பொதுச் சேவையில் உள்ள ஒரே துறையாகும். இத்தகைய இடமாற்றங்களுக்கு இணங்கத் தவறிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இயலாமையுடைய மாணவர்களை பல்கலைக்கழகங்களில் அனுமதிப்பது தொடர்பான கொள்கைத் தீர்மானங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய, அடுத்த கல்வியாண்டு முதல், அனைத்துத் துறைகளுக்கும் ஒரு ஒதுக்கீட்டு முறைமையின் அடிப்படையில் இந்தக் கொள்கை செயற்படுத்தப்படுவதுடன், இயலாமையுடைய மாணவர்களுக்கு தகுதி அடிப்படையிலான மாவட்ட ஒதுக்கீட்டு முறைமையின் மூலமாகவும் அனைத்துத் துறைகளுக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளது-என்றார்.

இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், பல்வேறு மாவட்டங்களில் காணப்படும் கல்வி தொடர்பான பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பிலும் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

# பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஒக். 02

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்துக்கான பயணக் கட்டணம் குறைக்கப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக் குழு அறிவித்துள்ளது.

பேருந்து கட்டணங்களில் குறைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமானால், எரிபொருள் விலை திருத்தத்தில் டீசல் விலை குறைந்தபட்சம் 4 வீதத்தினால் குறைக்கப்பட வேண்டும்.

இருப்பினும், தற்போதைய விலை திருத்தமானது 1.58 வீத குறைப்பை மாத்திரம் பிரதிபலிக்கிறது.

எனவே, பேருந்து பயணக் கட்டணத் திருத்தத்திற்கு வழிவகுக்கவில்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்ட எரிபொருள் திருத்தத்திற்கு அமைய டீசல் விலை 6 ரூபாயால் குறைக்கப்பட்டு, புதிய விலை 277 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சமையல் எரிவாயுவின் விலை மாற்றம் இல்லை!

கொழும்பு, ஒக். 02

ஒக்ரோபர் மாதத்தில் உள்நாட்டுச் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையில் திருத்தம் இருக்காது என்பதை லாப்ஸ் காஸ் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

லாப்ஸ் காஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கலாநிதி நிரோஷன் ஜே பீரிஸ் இதனை அறிவித்தார்.

அதேநேரம், லிட்ரோ எரிவாயு நிறுவனம், அதன் உள்நாட்டு சமையல் எரிவாயுவின் விலையானது ஒக்ரோபர் மாதத்தில் மாறாமல் இருக்கும் என்று தெரிவித்துள்ளது. (அ)

# வாகனங்கள் இறக்குமதிக்காக 1,007 மில்லியன் டொலர் செலவு

கொழும்பு, ஒக். 02

இலங்கையில் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதற்கு அமைய, 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையிலான 8 மாத காலப்பகுதியில், நாட்டிற்குள் வாகன இறக்குமதிக்காக 1,007.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட 2025 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்கான வெளிநாட்டுப் பிரிவு செயல்திறன் அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஒரே மாதத்தில் அதிகபட்ச வாகன இறக்குமதி செலவு கடந்த ஒகஸ்ட் மாதம் பதிவான நிலையில், அதன் எண்ணிக்கை 255.7 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். (அ)

# முஸ்லிம் மாணவிகள், தாய்மார் மத்தியில் அரசின் மீதான நன்மதிப்பு உயர்வடைவு!

## வுமென்ஸ் கோப்ஸ் சிறிலங்கா கூறுகிறது

கொழும்பு, ஒக். 02

முஸ்லிம் மாணவிகள் தங்களது கலாசார ஆடையுடன் நாட்டின் எப்பாடசாலையிலும் கல்வி கற்க முடியும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய எடுத்துள்ள தீர்மானம் வரவேற்கத்தக்கது என வுமென்ஸ் கோப்ஸ் சிறிலங்கா அமைப்பின் தலைவர் நிகாஸா ஷர்பீன் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இத்தீர்மானம் இன ரீதியாக சிந்திப்பவர்களுக்கு பலத்த அடியாகும் என்பதோடு முஸ்லிம் மாணவிகள் மற்றும் தாய்மார்கள் மத்தியில் இந்த அரசின் மீதான நன்மதிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லிம் மாணவிகளின் ஆடை தொடர்பில் சட்டங்கள் இருந்தாலும் கடந்த காலங்களில் பல்வேறான அசௌகரியங்களை பரீட்சைகளின் போதும் கல்வி கற்றலின் போதும் இம்மாணவிகள் எதிர்நோக்கி வந்துள்ளார்கள் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# அரசியல் கலாசாரத்தில் நாம் சமகாலத்தவர்கள்!

## ரணிலுடனான சந்திப்பு குறித்து மகிந்த

கொழும்பு, ஒக். 02

பரஸ்பர மரியாதையை தொடர்ந்து பேணிச்செல்ல முடியுமான அரசியல் கலசாரத்தில் நாங்கள் இருவரும் சமகாலத்தவர்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவரது கால்டன் இல்லத்தில் சந்தித்து சென்றமை தொடர்பில் முகப் புத்தகத்தில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்குமிடையில் சந்திப்பொன்று தங்காலை கால்டன் இல்லத்தில் இடம்பெற்றது. அங்கு நாங்கள் இருவரும் மிகவும் சிநேகபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தோம்.

அரசியல் ரீதியில் நாங்கள் இருவரும் வேறு நிலைப்பாட்டை வகித்தபோதும் தேசிய பொறுப்புகளை நிறைவேற்றும் அதே வேளையில் பரஸ்பர மரியாதையைப் பேணக்கூடிய ஒரு அரசியல் கலாசாரத்தின் சமகாலத்தவர்கள்.

அன்புக்குரிய ரணில் விக்கிரமசிங்கவின் வருகை தொடர்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று மைத்திரி விக்கிரமசிங்கவையும் மரியாதையுடன் நினைவு கூருகிறேன்-என்றுள்ளது. (அ)

# அரசியல்வாதிகளின் ஊழல்களை மறைப்பதற்காகவே தடுப்புக்காவல்!

## ஹரக் கட்டாவின் குடும்பம் ஐ.நா.வில் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 02

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் ஊழல்களை மறைப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழு உறுப்பினர் ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தக, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் உள்ள, வலிந்து காணாமல் ஆக்கப்படுவோர் தொடர்பான அலுவலகத்தில் ஹரக் கட்டாவின் குடும்பத்தினரால் இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

தனது மகன் மீது ஆயுதங்கள், போதைப்பொருள் அல்லது கடுமையான குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் எதுவும் பதிவு செய்யப்படாமல், அவர் அநீதியான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக, ஹரக்கட்டாவின் தந்தை தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

தமது மகன், பயங்கரவாத தடுப்புப் பிரிவின் காவலில் இருந்தபோது, அதிகளவான இலஞ்சம் கோரி அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அத்துடன், அவரிடம்பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய அரசியல்வாதிகள் பணம் கோரியமை தொடர்பிலும் தாம் அறிந்துள்ளதாக ஹரக் கட்டாவின் தந்தை குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தமது மகனுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளால் அவர் எதுவும் பேச முடியாத நிலையில் உள்ளதாகவும் அவருடைய தந்தை தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தனிமைப்படுத்தல், மோசமான உணவு தரம், அவரது மனைவி மற்றும் பிள்ளையை அணுக முடியாமை மற்றும் மருத்துவப் புறக்கணிப்பு உள்ளிட்ட அவரது தடுப்புக்காவல் நிலைமைகள் குறித்தும் அவரது குடும்பத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, தன்னிச்சையான மற்றும் அரசியல் ரீதியாக தூண்டப்பட்ட வகையில், ஹரக் கட்டா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனவும் இந்த விடயத்தில், ஐக்கிய நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# உத்தரவை மீறிய வான் மீது சூடு!

கொழும்பு, ஒக். 02

நிட்டம்புவ, உடமிட்ட பகுதியில் ஒரு வான் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

பொலிஸாரின் கூற்றுப்படி, சோதனைக்காக நிறுத்துமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மீறியதால் வான் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

சம்பவத்தில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளது.

நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கான உண்ணாவிரத போராட்டம் திருமலை உறவுகளும் இணைந்தனர்!

அம்பாறை, ஒக். 02

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த நீதிக்கான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று புதன்கிழமை ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது.

திருகோணமலை மாவட்ட உறவுகளும் அங்கு வந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

வயோதிபர் தினமான நேற்று ஒக்ரோபர் முதலாம் திகதியும் வயோதிபர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்ததை காணக் கூடியதாக இருந்தது.

பலர் சோர்ந்து காணப்பட்டனர். இன்னும் பலர் அழுதழுது கருத்து கூறினர். வயோதிபர்கள் பலர் படுத்த படுக்கையில் இருந்தனர்.



வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம், தமிழினவழிப்பு,வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், போர் குற்றங்கள் மற்றும் மனித புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் எனும் தொனிப் பொருளுடன் இப் போராட்டம் ஆரம்பித்தது.

இப் போராட்டத்தில் அதிகளவிலான பொதுமக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளும் கலந்து கொண்டனர். (அ)

# நற்பிட்டிமுனை நூலகத்தில் நேற்று சிறுவர் தின நிகழ்வு!

அம்பாறை, ஒக். 02


சர்வதேச சிறுவர் தினம் மற்றும் வாசிப்பு மாதம் என்பவற்றை முன்னிட்டு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறுவர் சிறப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

நூலகர் ஏ.எச். தௌபீக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நற்பிட்டிமுனை அல்-அக்ஸா முன்பள்ளிப் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது இவர்களுக்கு நூலக செயற்பாடுகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, வாசிப்பின் முக்கியத்துவம் பற்றியும் விபரிக்கப்பட்டது. மேலும், இச்சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டதுடன் அவர்களை மகிழ்ச்சியூட்டும் வகையில் இனிப்புப் பண்டங்களும் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. (அ)



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி காரைதீவு பெண்கள் பாடசாலையின் சிறுவர் தின நடை பவனி நேற்று புதன்கிழமை நடைபெற்றது.



# கல்முனையில் திடீர் பனிமூட்டம்

அம்பாறை, ஒக். 02

கல்முனை பிராந்தியத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலை திடீர் காலநிலை மாற்றத்தை அவதானிக்க முடிந்தது.

அதிகாலையில் பாரிய பனி மூட்டம் நிலவியது.

குறிப்பாக வீதிகளில் பனிமூட்டம் படர்ந்து காணப்பட்டது.

வீதியால் பயணிப்போருக்கு எதிரே செல்கின்ற வாகனத்தை அவதானிக்க முடியாத அளவுக்கு பனிமூட்டம் வீதியை மறைத்து இருந்தது.

இவ்வாறான நிலைமைகளில் வீதியால் பயணிப்போர் வாகனச் செலுத்திவோர் மிகுந்த அவதானத்துடன் மெதுவாக பயணித்தனர். (அ)

# பெண் குழந்தை மீட்பு; தாய், தந்தை கைது!

அம்பாறை, செப். 02

கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட குழந்தையின் பெற்றோரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் ஒலுவில் பிரதேசத்தில் பிறந்து சில நாட்களான பெண் குழந்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டிருந்தது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்டு வந்த அக்கரைப்பற்று பொலிஸார் செவ்வாய்க்கிழமை ஒலுவில் பிரதேசத்தை சேர்ந்த குழந்தையின் தந்தை மற்றும் நிந்தவூரை பிரதேசத்தை சேர்ந்த தாய் உள்ளிட்டோரை கைது செய்தனர்.

அத்துடன் காதலித்து வந்த தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் 17 வயதையுடையவர்கள் எனவும் அவர்களுக்கு திருமணமாகாத நிலையில் குறித்த குழந்தை பிறந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குழந்தையின் தந்தையின் உறவினர்கள் காதலுக்கு எதிர்ப்பை தெரிவித்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த பெண் தனது வீட்டில் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

இவ்விடயத்தை அறிந்து கொண்ட குழந்தையின் தந்தை காதலியின் வீடு சென்று எனது குழந்தையை நான் வளர்க்கிறேன், தாருங்கள் என்று பெற்றுக் கொண்டு வந்துள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குழந்தையின் தந்தை அவரது உறவுக்காரப் பெண் ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒலுவில் பகுதியில் கைவிடப்பட்டுள்ள பெண் குழந்தையொன்றைக் கண்டெடுத்துள்ளேன். உங்களுக்கும் பெண் குழந்தை இல்லை. எனவே இந்தக் குழந்தையை வளர்க்க முடியுமா என கேட்டுள்ளார். அதற்கு அவ்வுறவுக்கார பெண்ணும் சம்மதித்துள்ளார்.

இந்த நிலையில் குழந்தையின் தொப்புள்கொடி உரிய முறையில் வெட்டப்படாமை காரணமாக அந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்ததை அடுத்து அருகில் உள்ள ஒலுவில் வைத்தியசாலைக்கு அந்தக் குழந்தையைக் கொண்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்தே குழந்தையொன்று ஒலுவில் அண்டிய பகுதியில் நபரொருவரால் கண்டெடுக்கப்பட்டதாக கதை பரவியது.

இந்தப் பின்னணியில்தான் குழந்தையின் தாய் மற்றும் தந்தை ஆகியோரை அக்கரைப்பற்று பொலிஸார் கைதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# "தமிழர்களுக்கு எஞ்சியது கல்வி மாத்திரமே"

நாவிதன்வெளி, ஒக். 02

முப்பது வருட கால யுத்தத்தில் தமிழர்களுக்கு எஞ்சியது கல்வி மாத்திரமே என்று நாவிதன்வெளி பிரதேச சபைத் தவிசாளர் இ. ரூபசாந்தன் தெரிவித்தார்.

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளரும் இந்திரன் பௌண்டேசன் தலைமை ஒருங்கிணைப்பாளருமான இ. ரூபசாந்தனின் சிந்தனையின் செயல்பாடாய் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்துக்கான மாதிரி வினாத்தாள் தெளிவூட்டல் செயலமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாவிதன்வெளி வேப்பயடி கலைமகள் வித்தியாலயத்தில் அதிபர் கே. தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து தவிசாளர் மேலும் கூறுகையில்-

எமது தமிழினம் முப்பது வருட கால யுத்தத்தை சந்தித்து உடமைகள் உயிர்கள் பலவற்றை இழந்து ஏதிலிகளாக பல நாடுகளில் வாழ்ந்தாலும் உலக அரங்கிலோ எம் நாட்டிலோ எம்மவர்கள் இழக்காத சொத்து கல்வி மாத்திரமே. ஆகவே, நாம் எதை இழந்தாலும் கல்வியின் பயனால் அனைத்தையும் தேடிக்கொள்ள முடியும்.

இந்த நாவிதன்வெளி பிரதேசத்துக்கு மாத்திரமல்ல ஏனைய பகுதிகளுக்கும் கல்விக்கு சேவை செய்ய நான் ஒருபோதும் தயங்கியதில்லை. கல்வி கற்ற இளம் சமூகத்தை உருவாக்குவதன் மூலமே நாம் தனி மனித ஒழுக்கம், பொருளாதாரம் என்பவற்றை வளர்த்து முன்னேற்றம் அடைந்த சமூகத்தை உருவாக்கலாம் என அவர் தெரிவித்தார். (எ-08)

# 29 புலமையாளர்களுக்கு கௌரவம்

அம்பாறை, ஒக். 02



வாணி விழாவில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெற்ற 29 செட்டிபாளைய மாணவர்களை செட்டிபாளையம் சிவன் ஆலயம் கௌரவித்தது.

செட்டிபாளையம் மகாவித்தியாலயத்தில் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற 29 மாண வர்களை கௌரவிக்கும் நிகழ்வானது ஆலயத் தலைவர் மு.பால கிருஷ்ணனின் வழிகாட்டலில் ஆலய வளாகத்தில் நேற்று நடைபெற் றது.

நவராத்திரி தினத்தில் கல்விக்கு அதிபதியாகிய சரஸ்வதிக்குரிய வாணி விழாவன்று இச்சாதனையாளர் கௌரவிப்பு இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு சிவசிறி பிரணவரூப சர்மாவின் ஆசியுரையுடன் இந்நிகழ்வானது ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து திருவருள் சங்கத்தின் ஆலோசகர் க. துரைராஜாவினால் தலைமையுரை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் செட்டிபாளையம் மகா வித்தியாலய பிரதி அதிபர்களான திருமதி. சுதந்தி ஜெயக்குமார் மற்றும் ஆழகையா கிருபானந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்ற மாணவர்கள் அவர்களது பெற்றோர்கள், சிவன் ஆலய திருவருள் ஆண்கள் மற்றும் பெண்கள் சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினர்கள், தொண்டர்கள், அடியார்கள், நலன் விரும்பிகள், எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தரம் ஐந்திற்கு கல்வி கற்பிக்கும் திருமதி யோ.நடேசினி ஆசிரியையும் கௌரவிக்கப்பட்டார். (அ)

# திருக்கோவில் பிரதேச வீதிகளுக்கு மின்விளக்கு பொருத்த நடவடிக்கை

அம்பாறை, ஒக். 02

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள வீதிகளில் தெரு மின்விளக்கு பொருத்துதல் மற்றும் பழுதடைந்த நிலையில் உள்ள மின்விளக்குகளை திருத்துதல் போன்ற நடவடிக்கைகளில் திருக்கோவில் பிரதேச சபை மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

திருக்கோவில் பிரதேச மக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக தவிசாளர் எஸ்.சசிகுமாரின் வழிகாட்டலில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

காஞ்சிரங்குடா, தாண்டியடி உமிரி, கஞ்சிகுடியாறு, தம்பிலுவில் போன்ற பகுதிகளில் முதல் கட்டமாக தெரு மின்விளக்குப் பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோவிலில் உள்ள சகல பிரதேசங்களுக்கும் நேரடிக் கள விஜயம் மேற்கொண்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை கேட்டறிந்துவரும் தவிசாளர் சசிகுமார் அவற்றில் பிரதான பிரச்னைகளை நிவர்த்தி செய்து வருகிறார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எம்மை நாமே...

காலம் தாழ்த்தாது விரைவான சர்வதேச சிறப்பு சுயாதீன விசா ரணை ஆணையத்தை நியமித்திட கோரியும் குறித்த சுழற்சி முறையி லான உண்ணாவிரதப் போராட்டம் கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணம் - செம்மணியிலும் கிழக்கு மாகாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டு இன்றையதினம் (நேற்று) இந்தப் போராட்டத்தின் ஊடாக சர்வதேசத்தின் கவனத்துக்கு எங்கள் கோரிக்கையை வெளியிடுகிறோம்.

சர்வதேச சிறுவர், முதியோர் தினம் இன்றாகும். தாயகத்தில் அதிகளவான சிறுவர்கள், குழந்தைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் உறுப்பினர்கள் 350இற்கும் மேற்பட்டவர்கள் சர்வதேச நீதி கோரி போராடி நீதி கிடைக்காமலே மன உளைச்சலில் இறந்துள்ளனர்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து இலங்கை அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்திவந்த முறை மற்றும் தண்டனையின்மை சுழற்சிகளில் இருந்து மீள வரலாற்று சிறப்புமிக்க வாய்ப்பை இலங்கை தற்போது பெற்றுள்ளது. இதனை தவறவிடக்கூடாது என வலியுறுத்திக் கூறியுள்ளார். இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அத்துடன், அனைத்து வகையான உள நாட்டு பொறிமுறை மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணிமனை ஆகியவற்றை நாம் முற்றாக நிராகரிக்கிறோம்.

சர்வதேச நீதிப் பொறிமுறையில் மட்டுமே நாம் நம்பிக்கை வைக்கிறோம். சுயாதீனமான, பக்கச்சார்பற்ற, சர்வதேச பொறிமுறையை நாம் கோருகிறோம். தற்போதைய பேரவை கருத்திட்டம் தர முயர்தப்பட வேண்டும். இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் இனஅழிப்பு தொடர்பான விசாரணையை மேற்கொள்ள பன்னாட்டு நீதிமன்றத்திடம் பாரப்படுத்தப்பட வேண்டும். 2002 ஜூலை 01ஆம் நாளுக்கும் காலத்தால் முற்பட்ட குற்றங்களை விசாரிக்கும் வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு முற்பட்ட காலங்களுக்கு விசாரணை மேற்கொள்ள முடியாதவிடத்து இலங்கை தொடர்பான சிறப்பு சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றை ஏற்படுத்தி இனவழிப்பு உள்ளிட்ட குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான சட்ட நடவடிக்கை அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட வேண்டும்.

மனிதப் புதைகுழிகள் பற்றிய கண்டுபிடிப்பு விசாரணைகளை இலங்கை அரசு நிறுத்தி, சர்வதேசத்தின் கண்காணிப்பில் நடைபெற வேண்டும் எனக் கோருகிறோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? அவர்களுக்கான சர்வதேச நீதி வேண்டி 3 ஆயிரத்து 146 நாட்கள் தொடர்ச்சி யாக வீதிப் போராட்டங்களை முன் னெடுத்து வருகிறோம். அவர்களுக்கான சர்வதேச நீதியை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகி றோம். கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடராது நிறுத்த பின்வரு வன தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்கிறோம்.

அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும், ஊடகவியலாளர்கள் தமது சுயாதீனமான ஊடகப்பணிகளை முன்னெடுப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும், சிங்கள குடியேற்றம் - பௌத்தமயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும், தமிழர் தாயகப் பரப்பில் ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், நீதி வேண்டி போராடுபவர்கள் மீது புலனாய்வு பிரிவின் அச்சுறுத்தல்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும், எமது தேசத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் திட்டங்கள் உடன் நிறுத்தப்பட்ட வேண்டும், எமது வளங்கள் சுரண்டப்படுவதை உடன் நிறுத்தப்பட வேண்டும், பயங்கரவாத தடுப்பு சட்டம், நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கு ஈழத் தமிழருக்கான தனித்துவமான இறையாண்மைக்குரிய தாயகம், தேசியம் - சுயநிர்ணய உரிமை - அங்கீகரிக்கப்பட்டு அனைத்துலக சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் நிறைந்த அரசியல் தீர்வு குறிப்பிட்ட கால நிர்ணயத்துக்குள் காணப்பட வேண்டும். இயலாதவிடத்து விரைவாக அனைத்துலக சமூகத்தின் கண்காணிப்பில் தமிழ், மக்களாகிய எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க எம்மை நாமே ஆளக்கூடிய பொதுவாக்கெடுப்பை நடைமுறைப் படுத்துமாறு சர்வதேச சமூகத்தை கோரி நிற்கிறோம் - என்றுள்ளது.

(ஐ)

## 159பேர்...

அனுராதபுரம் கலாவெவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், மக்கள் தற்போது தமது குறைபாடுகளை அதிகாரம் இல்லாத எதிர்க்கட்சித் தலைவரிடமே முன்வைக்கின்றனர் என தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலட்சக்கணக்கான வாக்குகளுடன் அதிகாரத்தை வழங்கிய போதும், அரசாங்கம் மக்களுக்கு எதிர்பார்த்த பதிலையோ, தீர்வையோ வழங்கவில்லை.

கலாவெவ போன்ற விவசாயப் பகுதிகளில் உள்ள மக்களுக்குத் தேவையான உயர்தர விதைகள், உரங்கள், பூச்சி நாசினிகள் கிடைப்பதில்லை. வாக்குறுதியளிக்கப்பட்ட நெல்லுக்கான உத்தரவாத விலையான ரூ. 150 கிடைக்கவில்லை.

யானை - மனித மோதல் போன்ற பிரச்னைகள் "ஒரே கையெழுத்தில்" தீர்க்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், இதுவரை எதுவும் நடக்கவில்லை.

விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினால், ஆளும் தரப்பினர் வாயை அடைக்க முயற்சிக்கின்றனர்.-என்றார்.

## கைத்தொலைபேசி...

கைத்தொலைபேசியைப் பார்ப்பதால், அவர்களுக்குக் கழுத்து மற்றும் முதுகெலும்பு சார்ந்த பாதிப்புகள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கழுத்து, தோள்பட்டையில் வலியோ அல்லது முதுகெலும்பு அடுக்கில் மாற்றம் ஏற்பட்டு, பிள்ளைகள் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாளடைவிலான பழக்கம், பிள்ளைகளின் தோற்றத்தை மாற்றக் கூடும் எனவும் மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிள்ளைகள் முன்பைப் போன்று, வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடாததே இதற்கு முக்கியக் காரணம் எனவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

கைத்தொலைபேசியில் மூழ்கிக் கிடக்கும் பிள்ளைகளுக்கு யோகா, உடற்பயிற்சி உள்ளிட்டவை அளிப்பது, இதற்குத் தீர்வு என்றாலும், எவ்வாறு அமர்வது என கற்றுக் கொடுப்பது, சரியான தலையணை உபயோகிப்பதும் நல்லது என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# அரச எதிர்ப்பாளர்களுக்கு அடக்குமுறை மூலம் பதில்

### ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஒக். 02

எதிர்க்கட்சிகள் மாத்திரமின்றி தமது உரிமைகளுக்காக போராடும் மக்கள் மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் தொடர்பில் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கோ, சூழலியலாளர்களின் கருத்துகளுக்கோ அரசாங்கம் முக்கியத்துவமளிக்கவில்லை. பேச்சின் ஊடாக இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக, கலகமடக்கும் பிரிவின் ஊடாக பதிலளிக்க முயற்சிக்கப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மான் எம். பி. தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்சியின் பணிமனையில் அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டம் பொது மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தால் சுற்றுச்சூழலுக்கும், பறவைகளுக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்படும் என சூழலியலாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால், அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கோ, சூழலியலா ளர்களின் கருத்துகளுக்கோ முக்கியத்து வமளிக்காமல் அவற்றை உதாசீனப்படுத்துகிறது. இவற்றுக்கு பதிலளிப்பதற்கு ஆளும் தரப்பில் எவரும் முன்னுரிமை அளிக்கவுமில்லை.

இவ்வாறான பிரச்னைகள் ஏற்படும் போது சம்பந்தப்பட்ட தரப்பி னருடன் கலந்தாலோசித்து பிரச்னைக்கு தீர்வு காண வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆனால், அரசாங்கத்திடமிருந்து இதுவரையில் இந்த கேள்விகளுக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை. மாறாக கலகம் அடக்கும் பிரிவினரை அனுப்பி அவர்களை தாக்குவதே அரசாங்கத்தின் பதிலாகவுள்ளது. - என்றார்.

(ஐ)

## வெடிக்காத...

பொலிஸாருக்கு அறிவித்தார்.

அங்கு வந்த பொலிஸார் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றின் அனுமதியை பெற்று அவற்றை பாதுகாப்பாக மீட்டுச் சென்றனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## சர்வதேச...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 7 நாட்களாக செம்மணியில் நடைபெற்று வந்தது.

போராட்டத்தின் நிறைவு நாளான நேற்றைய தினம் மதியம் அரியாலை (செம்மணி தொடர்நிலம்) மனிதப் புதைகுழியில் சிறுவர்களின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இவ்வாறு கொலையான சிறுவர்களுக்கு நீதி கோரி கவனவீர்ப்பு போராட்டத்தை தீப்பந்தம் ஏந்தி போராட்டக்காரர்கள் முன்னெடுத்தனர்.

இதன்போது, உள்நாட்டு போரின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமைகள் மீறல், தமிழின அழிப்பு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் அரியாலை - சித்துப்பாத்தி, கொக்குத்தொடுவாய், மன்னார் மனித புதைகுழிகளுக்கு நீதி வேண்டியும் உள்நாட்டு பொறிமுறையை நிராகரித்தும் - சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

அத்துடன், போரின்போது தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உள்நாட்டு பொறிமுறை மூலமான தீர்வை வலியுறுத்திய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நிராகரித்து - அதனைப் போராட்டக்காரர்கள் தீயிட்டு எரித்தனர்.

தொடர்ந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக்கான கோரிக்கை மனு வாசிக்கப்பட்டதுடன், அதனை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. (ஐ)

## தாஜுதீன் கொலை..

என்று அவர் தெரிவித்தார்.

இந்த குற்றங்களை நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களே செய்தார்கள் எனவும், அவர்கள் குற்றங்களை மூடி மறைத்தனர் எனவும் அவர் தெரிவித்தார். மேலும், வசிம் தாஜுதீன் 2012இல் கொலை செய்யப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு பத்திர மோசடி இடம்பெற்றதோடு, 2019 இல் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்த சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் யாராயினும் சட்டம் செயல்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

எனினும் இந்த குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் அரசாங்கம் தலையிடாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

## அரியாலை....

இதன்போது, மூன்றாம் கட்ட அகழ்வு பணிக்கான பாதீட்டுக்கான அங்கீகார அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க அரச சட்டத்தரணி கால அவகாசம் கோரினார். இதைத் தொடர்ந்தே வழக்கு எதிர்வரும் 13ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டது.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் கடந்த மாதம் 6ஆம் திகதி நிறைவடைந்தது. 3 கட்டங்களாக 54 நாட்கள் நடைபெற்ற அகழ்வு பணிகளில் 240 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு 239 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இதேவேளை, அந்தப் பகுதியில் இன்னமும் எலும்புக்கூடுகள் இருக்கலாம் கருதப்படுகிறது. இதையடுத்து, அங்கு 8 வார காலம் ஆய்வை தொடர்வதற்கு சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன் நீதிமன்றிடம் கோரிக்கை வைத்தார். இதற்கான பாதீட்டு அறிக்கையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தாஜுதீன் மரணம்...

கொலை செய்யப்பட்ட 'கஜ்ஜா' என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரமுகர், 2012 இல் தாஜுதீன் இறப்பதற்கு முன்பு அவரைப் பின்தொடர்ந்த வாகனத்தில் இருந்ததாக பொலிஸார் சமீபத்தில் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து நாமலின் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஊடகங்களுக்குப் பேட்டியளித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல், தாஜுதீனின் மரணம் குறித்த தற்போதைய கவனத்தை 'ஜஸ் வாரம்' மற்றும் 'ரணில் வாரம்' போன்ற அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கடந்த கால நிகழ்வுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, சிலர் அதை தனிப்பட்ட அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் குறிக்கிறது.

இருப்பினும், வழக்கின் அனைத்து தொடர்புடைய விவரங்களும் முழுமையாக ஆராயப்பட வேண்டும் என்றார்.

'கஜ்ஜா' என்ற நபரின் சமீபத்திய அடையாளம் குறித்து கருத்து தெரிவித்த நாமல், அந்த நபரின் குடியிருப்பு, கூட்டாளிகள் மற்றும் நடமாட்டங்களை அதிகாரிகள் கவனிக்க வேண்டும் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்காவின் தடை காரணமாக இலங்கை-ரஷ்ய வர்த்தகம் பாதிப்பு

### ரஷ்யத் தூதுவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 02

**அமெரிக்காவின் தடைகள் காரணமாக ரஷ்யா-இலங்கை இருதரப்பு வர்த்தகம் மற்றும் சுற்றுலாவின் முழு திறனையும் உணர முடியாது என்று ரஷ்ய தூதர் லெவன் ஜாகார்யன் தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள தடைகள் காரணமாக இலங்கையில் மின்னணு பரிவர்த்தனைகள் சாத்தியமற்றது.

இதனால், ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் கையில் பணத்தை எடுத்துச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாத் பைண்டர் அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த வட்டமேசை கலந்துரையாடலின் அவர் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான நடவடிக்கைகள் அடுத்த மாதம் மீண்டும் தொடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா தற்போது மாலைதீவுக்கு நேரடி விமான சேவைகளை முன்னெடுத்துள்ளது. அடுத்து வியட்நாமுக்கு நேரடி விமான சேவைகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தடைகள் நீக்கப்பட்டால் இருதரப்பு வர்த்தகத்தின் சாத்தியக்கூறுகள் எவ்வளவு பெரியதாக இருக்கும் என்று கேள்வியெழுப்பிய போது, ரஷ்யா-உக்ரைன் போர் முடிந்த பின்னரே அதை காண முடியும் என தூதுவர் பதிலளித்தார்.

"போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ரஷ்ய தரப்பின் ஒரு முக்கிய நிபந்தனை தடைகளை நீக்குவதாகும்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை பல ஆண்டுகளாக அதிகரித்துள்ளது, கடந்த ஆண்டு 200,000 இற்கும் மேற்பட்ட ரஷ்யர்கள் இலங்கை வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கை பிரிக்ஸ் அமைப்பில் இணைவதை ரஷ்யா வரவேற்பதாக தூதுவர் வலியுறுத்தினார்.

எவ்வாறாயினும், கடந்த பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளுமாறு விடுத்த அழைப்பை இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஏற்காதது குறித்து கருத்து தெரிவிப்பதைத் தூதுவர் தவிர்த்திருந்தார்.

அழைப்பிதழை தாம் ஒப்படைத்ததாகவும், ஆனால் அதை ஏற்றுக் கொள்வதும் ஏற்காததும் இலங்கையின் இறையாண்மை முடிவு என்றும் ரஷ்ய தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## ஜெனிவா சென்றார் சிறிதரன்!

கொழும்பு, ஒக். 02

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரின் பக்க நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஜெனிவாவைச் சென்றடைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், அங்கு வேறு பல முக்கிய சந்திப்புக்களிலும் பங்கேற்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரில் புதிதாக நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணை அனுசரணை நாடுகளால் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் முதலாவது வரைவு கடந்த 9 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், அதில் திருத்தங்கள் உள்வாங்கப்பட்ட முதலாவது மீளாய்வு வரைவு கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பி., அங்கு நடைபெறவுள்ள பக்க நிகழ்வொன்றில் பங்கேற்கவுள்ளார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினதும், பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை அவர் நடத்துவார் என்றும், அதன் போது தமிழர்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பதவி விலகவேண்டும்

### பொதுஜன பெரமுன வலியுறுத்து

கொழும்பு, ஒக். 02

இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மக்கள் விடுதலை முன்னணியின் சட்டப் பிரிவில் உறுப்பினராக பதவி வகித்ததாக அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆணைக்குழுவின் சுயாதீனத்தை கருத்திற்கொண்டு பணிப்பாளர் நாயகம் உடன் பதவி விலக வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

சட்டவாட்சியை மேற்கொள்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் எதிர்க்கட்சியினரை இலக்குப்படுத்தியுள்ளது. பொலிஸ் திணைக்களம் முறையற்றதாக செயற்படுகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் அரசியல் செயற்பாட்டாளராக இருந்த சானி அபேசேகர குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசார மேடைகளில் உரையாற்றிய ரவி செனவிரத்ன பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸார் தற்போது அரசியல் நோக்கத்துடன் செயற்படுகின்றனர்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மக்கள் விடுதலை முன்னணியின் சட்டப் பிரிவில் உறுப்பினராக பதவி வகித்ததாக அக்கட்சியின் முன்னாள் உறுப்பினர் நந்தன குணதிலக குற்றஞ்சாட்டியுள்ளார்.

சுயாதீன இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் சுயாதீனத்தை கருத்திற் கொண்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க பதவி விலக வேண்டும். அல்லது இந்த குற்றச்சாட்டை முன்வைத்த நபருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## அனுமதியின்றி ஜனாதிபதி செயலகம் நோக்கி ட்ரோன் பறக்கவிட்டவர் கைது

கொழும்பு, ஒக். 02

காலி முகத்திடலில் இருந்து ஜனாதிபதி செயலகம் நோக்கி அனுமதியின்றி ட்ரோனை பறக்கவிட்டதற்காக நெதர்லாந்து நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ட்ரோனையும் பொலிஸார் காவலில் எடுத்துள்ளனர்.

சந்தேக நபர் விமானப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 56 வயதுடையவர் ஆவார்.

கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் திலீப சி. பெரேராவின் அறிவுறுத்தலின் பேரில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்டோருக்கு எதிரான வழக்கு ஒக்.15இல் விசாரணைக்கு

கொழும்பு, ஒக். 02

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகன் ஆகியோருக்கு எதிராக கையூட்டல் ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மேலதிக விசாரணைக்காக எதிர்வரும் 15 ஆம் திகதி அழைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுமார் ரூ. 97 மில்லியனுக்கு அருகிலான பெறுமதியுடைய சொத்துக்கள் மற்றும் உடைமைகளைச் சட்ட விரோதமான முறையில் சம்பாதித்தமை தொடர்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது கெஹலிய ரம்புக்வெல உட்பட அனைத்து பிரதிவாதிகளும் நீதிமன்றில் முன்னிலையாகினர்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரி மற்றும் பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களைக் கருத்தில் கொண்ட பின்னர், இந்த உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது. (அ)

## பஸ் நிறுத்த உணவகங்களில் அதிக விலை கொடுக்க நேரிடின் உடன் முறையிடுங்கள்!

கொழும்பு, ஒக். 02

நீண்டதூர சேவை பேருந்துகள், பயணிகள் தேநீர் அருந்துவதற்காக நிறுத்தப்படும் உணவகங்களில், உணவுகள் மற்றும் பானங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமாக விற்கப்பட்டால், அதுகுறித்து முறைப்பாடளிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவுறுத்தியுள்ளது.

அந்த அதிகாரசபையின் "1977" என்ற துரித இலக்கத்துக்கு இத்தகைய முறைப்பாடுகளை வழங்குமாறு பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

இந்த அறிவுறுத்தல் பெந்தலுவ-பரகடுவ பகுதியில் உள்ள ஓர் உணவகம் தொடர்பாக வந்த முறைப்பாட்டை தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளது.

அங்கு தண்ணீர் போத்தல்கள் உள்ளிட்ட பொருட்கள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டமை குறித்து முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, நுகர்வோர் விவகார அதிகாரசபையின் இரத்தினபுரி மாவட்டக் கிளை அதிகாரிகள் சோதனை நடத்தி, உணவக உரிமையாளரை இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதையடுத்து, அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பொலித்தீன் பைகளை இலவசமாக வழங்குவதை தடுக்க வர்த்தமானி!

கொழும்பு, ஒக். 02

பொருள் வாங்கும் பை உள்ளிட்ட பொலித்தீன் பைகளை இலவசமாக வழங்குவதைத் தடுக்கும் வகையில், எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் அவற்றுக்கு கட்டணம் அறவிடப்படுவது தொடர்பான வர்த்தமானியை வெளியிட எதிர்பார்ப்பதாகச் சுற்றாடல் அமைச்சர் உட்பட பிரதிவாதிகள் நேற்று உயர் நீதிமன்றில் தெரிவித்தனர்.

பொலித்தீன் பாவனையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் வேலைத்திட்டமொன்றை வகுக்கக் கோரி, சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவொன்று பிரதம நீதியரசர் உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டண அறவீடு குறித்து மார்ச் மாதத்திலேயே உடன்பாடு எட்டப்பட்ட போதிலும், பிரதிவாதிகள் நடவடிக்கை எடுக்கத் தவறியதாலேயே மீண்டும் நீதிமன்றை நாட வேண்டியிருந்ததாக சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கலாநிதி ரவீந்திரநாத் தாபரே தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி சொலிசிட்ட ஜெனரல் அவந்தி பெரேரா, எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் கட்டணம் அறவிடும் வகையிலான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் என நீதிமன்றுக்கு அறிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org